STC.No.244/2025 DW1.திரு.அருண்சஞ்சய்
தேதி– 22.04.2026
எதிரி மற்றும் புகார்தாரர் ஆஜர்.

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

1. நான் எனது முதல் விசாரணையில் குரு மெஸ் நடத்தி வருவதாக கூறினேன் என்றால் சரிதான். 2022லிருந்து காந்தி நகரில் மெஸ்நடத்து வருகிறேன். அதன்பின்பு கம்பம் நகராட்சியில் மெஸ் தொடங்கினேன் என்றால் சரிதான். அதனை காலி செய்துவிட்டு கம்பம் காந்தி சிலைக்கு கீழ் புறம் ஒரு மெஸ் தொடங்கினேன் என்றால் சரிதான். எனது மைத்துனர் பெயர் அருள்மணி என்றால் சரிதான். புகார்தாரரும், எனது மைத்துனரும் நண்பர் என்றால் தெரியாது. மேற்படி விபரத்தை பொய்யாக கூறுகின்றேன் என்றும், புகார்தாரரும், எனது மைத்துனரும் எனது கடையில் சாப்பிட்டு எனக்கு இருவரும் எனக்கு பழக்கமானவர்கள் என்றால் சரியல்ல, எனக்கும், எனது மைத்துனருக்கும் 8 வருடங்களாக பேச்சு வார்த்தைஇல்லை, அவர் எனது கடைக்கு வந்ததில்லை. மேற்படி விபரத்தை பொய்யாக கூறுகின்றேன் என்றால் சரியல்ல.

2. எனது கடைக்கு பணம் தேவை உள்ளது என்றும், அதனால் 4, 5 நபர்களிடம் கடன் வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல, 2 நபர்களிடம் கடன் வாங்கியுள்ளேன். தாவா காசோலை மற்றும் அதிலுள்ள கையொப்பம் என்னுடையது என்றால் சரிதான். காசோலையில் 20.06.2025 தேதியிட்டு கொடுத்து நான் 5 லட்சம் புகார்தாரரிடம் பணம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. 20.05.2025ம் தேதியன்று எனது மைத்துனர் கூறியதன்பேரில் நான் புகார்தாரரின் வீட்டிற்கு சென்று பணம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. எனது வங்கியில் போதிய பணமில்லை என்று தெரிந்து கொண்டே காசோலையை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. புகார்தாரர் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய பின்பு அவரை தெரியாது என்று கூறி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை.

3. உண்மையாக இருந்திருந்தால் காவல்நிலையத்தில் நான் புகார்

கொடுத்து வழக்கு பதிவு செய்ப்பபட்டிருக்கும் என்றால் சரியல்ல. நான் அனுப்பிய பதில் அறிவிப்பில் 3 வது பக்கத்தில் அந்த சமயத்தில் மலைச்சாமியுடன்அவரதுநண்பர் வேல்முருகன் உடன் இருந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். வேல்முருகன் தான் இருந்தார் என்று தெரிந்துள்ள நிலையில் அவர் மீது புகார் கொடுத்திருப்பேன் என்றும், நான் உண்மையில் கடன் வாங்கியிருந்ததால்தான் புகார்தாரர் மீது புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் பதில் அறிவிப்பினை முன்னுக்கு பின் முரணாகககூறியுள்ளேன் என்றால் சரியல்ல. மலைச்சாமி மற்றும் வேல்முருகன் ஆகியோர்கள் நண்பர்கள் என்று நிரூபிப்பதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

4. இந்நீதிமன்றத்தில் 5 வழக்குகள் தாக்கல் செய்து நிலுவையில் உள்ளதுஎன்றால் ஒரு வழக்கு மட்டும் உள்ளது. எனது கடையின் தேவைக்காக பலநபர்களிடம் பணம் பெற்று காசோலை கொடுத்து மோசடி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. புகார்தாரருக்கு ஒருமாதத்திற்குள் பணத்தை எடுத்து கொள்ளலாம் என்று கூறி மோசடி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் புகார்தாரருக்கு பொய்யான சங்கதிகளை கூறி பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் சரியல்ல, வேல்முருகனை யார் என்றே தெரியாது. நான் புகார்தாரரை ஏமாற்றக்கூடிய செயலில் ஈடுப்பட்டதால் நான் தண்டிக்கப்படவேண்டிய நபர் என்றால் சரியல்ல. புகார்தாரர் தனியார் மதுபானக்கடையில் மேலாளராக பணிபுரிவதாலும், ரியல் எஸ்டேட் தொழில் செய்வதாலும் அவரிடம் எப்போதும் பணம் இருக்கும் என்றால் சரியல்ல.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

AMALANATHA KAMALAKANNAN S

Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.04.22 15:07:05 +0530

J.M, F.T.C(M.L),Uthamapalayam